ஜீலை 2024.

**அன்பான சகோதரிகளே,**

எனது அன்பான கணவரும், நித்திய நினைவாகிய நம்முடைய அன்புக்குரிய அதி வணக்கத்துக்குரிய மெட்ரோபொலிட்டன் அடிகளார் இறைவனடி சென்று இரண்டு மாதங்களாகின்றன. இது ஒரு குடும்பமாக, பேராயர்கள் மற்றும் திருச்சபையாக நாம் எதிர்பாராத ஒரு சம்பவமாகும். அவர் நம்மை விட்டு பிரிந்ததைக் குறித்து நாம் ஒன்றாக சேர்ந்து துக்கப்பட்டதோடு, பல வருடங்களாக உண்மையோடு பணிச் செய்ததையும், கிறிஸ்துவானவரை மற்றவர்களுக்கு அறியச் செய்ய அவர் மேற்கொண்ட அனைத்து செயல்முறைகளையும், ஏழைகளுக்கு உதவி செய்ததையும், தூய திருச்சபையை வழிநடத்தியதையும், நாம் நினைவு கூர்ந்து, கண்ணீரோடு அவருடைய அடக்க ஆராதனையை மேற்கொண்டோம்.

மேலும், இச்சந்தர்ப்பத்திற்கு பங்குக்கொள்ள முடியாத ஒவ்வொருவரும் நேரலை ஒலிப்பரப்பில் அவருடைய அடக்க ஆராதனையை பார்த்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். மெட்ரோபொலிட்டன் அடிகளாருக்கு பிரியாவிடை செலுத்த எத்தனை பிரதானிகளும் பொதுமக்களும் வந்திருந்தார்கள் என்பது ஆச்சிரியமாக இருந்தது. அவருடைய வாழ்க்கையின் நற்செய்தி மற்றும் கிறிஸ்துவின் அன்பு அவர்களை தொட்டது. அடக்க ஆராதனையின் போது, எங்கள் முழு குடும்பத்தையும் பெரிய திரையில் கண்டிருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். இது எளிதான விடயம் அல்ல, இது போன்ற ஒரு துக்ககரமான சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக நிற்க எங்களுக்கு இறைவன் அருள்புரிந்தார். மேலும், நாங்கள் முன்னோக்கி கடந்து செல்ல உதவிய உங்கள் பிரார்த்தனைக்காக நன்றி செலுத்துகின்றேன்.

40 நாட்கள் முடியும் வரை நான் எனது மகள் சாரா மற்றும் அவருடைய குடும்பத்தாருடன் இருந்தேன். மேலும், புதிய மெட்ரோபொலிட்டன் அடிகளார் நியமிக்கப்படும் வரை இருந்த பின்னரே, நான் வீட்டுக்கு வந்தேன். என் கணவரின் மறைவிற்கு பின்னர் நான் கவனிக்க வேண்டிய அநேக விடயங்கள் உள்ளன. மேலும், எனக்கு வழங்கிய அனைத்து உதவிகளுக்காகவும் எனது குடும்பத்தினருக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்.

நான் வீட்டிற்கு வந்த நாள் முதல், எங்கள் திருச்சபையில் இருக்கின்ற எங்களை அதிகமாக நேசிக்கின்ற மற்றும் எங்களுக்காக பிரார்த்திக்கின்ற அனைத்து சகோதரிகளையும் குறித்து நினைவுகூர்ந்தேன். என் கணவரின் இழப்பின் பின்னர் நான் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியது தொடர்பாக நீங்கள் ஆச்சரியப்பட்டிருப்பீர்கள் என நான் நினைக்கின்றேன்.

அன்புள்ள சகோதரிகளே, நான் எப்படி இருக்கின்றேன் என்பதை உங்களுக்கு தெரிவிக்கவும், இந்த கடினமான நேரத்தில் இறைவன் எனக்கு அளித்த தயவைக் குறித்து உங்களிடம் பகிர்ந்துக்கொள்ளவும் இக்கடித்தை நான் எழுதுகின்றேன். நாம் விழுந்து போன உலகத்தில் வாழ்வதோடு, நாம் அனைவருக்கும் நம் வாழ்க்கையில் பல்வேறுபட்ட போராட்டங்களுக்கும் இழப்புகளுக்கும் முகம் கொடுக்க நேரிடும். இன்றைய தினம் நான் உங்களுக்கு எழுதுகின்ற இந்த விடயம், எதிர்காலத்தில் உங்களுக்கு உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

**மெட்ரோபொலிட்டன் அடிகளார் இல்லாத குறையை, எங்களது பேரக்குழந்தைகள் உட்பட குடும்பத்தில் உள்ள அனைவரும் மிகவும் உணர்கின்றோம்.** அவர் அநேக பிரயாணங்களை மேற்கொண்டாலும், அடிக்கடி வீட்டுக்கு வருவார். ஆனாலும், இப்பொழுது அவரை மீண்டும் சந்திக்க பரலோகத்துக்கு செல்லும் வரை நான் காத்திருக்க வேண்டும். என்னை பொறுத்தவரையில், மெட்ரோபொலிட்டன் அடிகளாரும் நானும் திருமணம் முடித்து கிட்டத்தட்ட 50 வருடங்கள் ஆகின்றன. (50 வருடங்களுக்கு 12 நாட்கள் குறைவு) எங்கள் வாழ்க்கையின் கடைசி காலத்தை ஆண்டவருக்கு பணி செய்து ஒன்றாக சேர்ந்து கழிக்கலாம் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனாலும், அவை அனைத்தும் திடீரென மாறியது. திடீர் விபத்து மற்றும் மரணம், இந்த பூமியிலிருந்து விடைபெறுவதற்கு முன்னர், உரையாடவோ, விடைப்பெறவோ இடமளிக்கவில்லை.

**எனக்கு புரியாத பல விடயங்கள் உள்ளன.** மேலும், அதற்கான பதிலை பெற, நிலை வாழ்வு கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டும் என்ற கேள்வியும் என்னிடம் உள்ளது. அது வரை எமது இறையாண்மை கொண்ட இறைவன் மேல் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என நான் தீர்மானித்திருக்கின்றேன். ஏனெனில், அவர் நல்லவர், அவர் அன்பானவர், அவர் ஒரு போதும் தவறும் செய்யமாட்டார் என அவருடைய வார்த்தையில் கூறப்பட்டுள்ளது.

**எனது கண்ணீர், நான் உணரும் தனிமை, வேதனை மற்றும் துக்கம் குறித்து, இயேசு கிறிஸ்துவானவர் கவலைப்படுகிறாரா?** அவர் இவ்வுலகில் வாசம் செய்து, நான் அனுபவிக்கின்ற அனைத்தையும் அவர் ருசி பார்த்திருக்கின்றார் என இறைவனுடைய வார்த்தையில் எனக்கு உறுதி செய்கின்றது. அது மாத்திரமின்றி, அவர் சிலுவையில் என்னுடைய அனைத்து துக்கம் வேதனைகள் மற்றும் பாடுகளை சுமந்தார். நான் அழும்போது, நான் தனிமையை உணரும் போது மற்றும் என்னுடைய எதிர்காலம் தொடர்பாக நான் சிந்திக்கும் போது, அவர் அதை புரிந்துக்கொள்வார்.

**இப்பொழுது நான் உணரும் துக்கத்திலிருந்து என் இருதயம் எப்போது விடுபடுமோ?** இறைவன் படைத்த வழியில், சிரமங்களின் மத்தியிலும், (உணர்வுபூர்வமாக) காலத்தோடு பயணிக்க நேரிடும் போது, எல்லா இழப்புக்களின் அனுபவங்களையும் தாங்கிக்கொண்ட பின்னர், எமது ஆன்மாவால் பழைய நிலைமையை அடைய முடியும். அநேக உபத்திரவங்களுக்கு முகம் கொடுத்த தாவீது தனது அனுபவத்தினால் ‘‘அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்.....’’ என திருப்பாடல் 23:3ம் வசனத்தில் சாட்சி பகிர்கின்றார். நானும் இந்நாட்களில் திருப்பாடல் 23 மற்றும் இன்னும் இரண்டு திருப்பாடல்கள் மூலம் ஒரு நாளில் பல தடவைகள் மன்றாடுகின்றேன். அவருடைய வார்த்தை மீது நம்பிக்கை வைத்த எனக்கும் ஏனைய அனைவருக்கும் அவர் அளித்த வாக்குறுதி நிறைவேறும் என நான் என் முழு இருதயத்தாலும் நம்புகின்றேன்.

**இறைவனை மாத்திரமே, இன்றைய நாள் மற்றும் இச்சந்தர்ப்பத்தில் நான் நம்புகின்றேன்.** அப்பொழுது தான் என்னால் எல்லாவற்றையும் நிர்வாகிக்க முடிகின்றது. இல்லாவிட்டால், விரக்தியும் சலிப்பும் மாத்திரமே ஏற்படும். மேலும், அவர் ஒவ்வொரு நாளும் என்னோடு பயணித்து, எனக்கு தேவையான பெலத்தை அருள உண்மையுள்ளவராக இருக்கின்றார் என்பதை நான் நம்புகின்றேன். நான் அன்றாடம் செய்ய வேண்டிய விடயங்களின் பட்டியலானது தற்போது குறைவாக இருப்பதோடு, சில சந்தர்ப்பங்களில் அனைத்தையும் விட்டுவிட்டு, ஓய்வு எடுக்கும்படியாக என் பேரக்குழந்தைகளுடன் நான் நேரத்தை செலவிடுவேன்.

**நான் இறைவனுடைய வார்த்தை மீது நம்பிக்கைக் கொண்டு அதை பற்றிக்கொண்டிருப்பது எனக்கு மிகவும் உதவியாக இருக்கின்றது.** எனது சொந்த வாழ்க்கையின் சவாலான காலங்களிலும், இறைப்பணியில் ஈடுபடும் போது நாங்கள் எதிர்கொண்ட எல்லா போராட்டங்களிலும் இதை கற்றுக்கொண்டு பயிற்சி பெற வேண்டியிருந்தது. என் அன்பிற்குரிய சகோதரிகளே, உங்கள் வாழ்க்கையிலும் பெரிதான சோதனைகளுக்கு முகம் கொடுக்க முன்னர், இதை பழகிக்கொள்ளும்படியாக நான் உங்களை தைரியப்படுத்துகின்றேன். *‘‘......நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டுவிலகமாட்டேன்’’.......* (எபிரேயர் 13:5) என்ற இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதியான இந்த வசனத்தை நான் உறுதியாக நம்புகின்றேன். அது எதிர்காலத்தில் எனக்கு என்ன நேரிடுமோ என்ற பயத்தை என்னிடமிருந்து அகற்றுகின்றது.

**இறைவன் நம்மீது வைத்துள்ள அன்பு மற்றும் தயவைக் குறித்து நான் உங்களுக்கு இவ்வாறு கூறுகின்றேன்.** என் கணவர் ஆண்டவரோடுகூட ஜீவிக்க சென்ற நாள் முதல் இதுவரை, எனது பரலோக பிதாவானவர் அவருடைய சமாதானத்தினால் என் இருதயத்தை நிரப்பியுள்ளார். நான் கண்ணீர் சிந்தினாலும், அவருடைய சமாதானம் என்னை இரவு பொழுதில் நன்கு நித்திரைச் செய்ய உதவுகின்றது. ஆகையால், என் இருதயத்தில் எந்தவொரு பயமும் இல்லை. இறைவன் எம் மேல் காண்பிக்கின்ற அக்கறையையும் தயவையும் குறித்து நான் நன்கு அறிந்திருக்கின்றேன்.

என் கணவர் அவருடைய அழைப்புக்கு உண்மையாக இருந்தார். இறைவனை அறியாத மக்கள் அருகில் செல்ல வேண்டுமென்று அவருக்குள் இருந்த தரிசனம் மற்றும் இவ்வுலகில் வாசம் செய்த கடைசி தருணம் வரை ஆண்டவருக்கு பணிச் செய்ததைக் குறித்தும் **நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.** நாம் இப்பொழுது அவரை பார்க்க நேர்ந்தால், அவருடைய பல வருட உழைப்பு, முடிவில்லாத பயணம், அனைத்து போராட்டங்கள் மற்றும் சோதனைகள், எமது மீட்பரை முகத்துக்கு முகம் சந்தித்த போது அனைத்தும் மதிப்புக்குரியவை என்று அவர் கூறுவார் என நான் நம்புகின்றேன்.

**மெட்ரோபொலிட்டன் அடிகளார் அநேக சந்தர்ப்பங்களில்** எபிரேயர் 12:1ம் வனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, திரண்டு வரும் மேகம் போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்கிறது என்பது தொடர்பாக பேசினார். அவரும் இந்த மேகத்துடன் சேர்ந்திருப்பார் என நினைக்கின்றேன். நாம் அவருடைய முன்மாதிரிகளை பின்பற்றி, தூய திருச்சபையாக அவர் நமக்காக விட்டுவிட்டுச் சென்ற தரிசனத்தையும் வழிநடத்தலையும் முன்னோக்கி கொண்டு செல்வதை, அவர் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கின்றார்.

அன்பான சகோதரிகளே, நாம் நிலை வாழ்வை தேர்ந்தெடுத்து, இதற்கு முன்னர் நற்செய்தியை கேட்காதவர்களுக்கு நற்செய்தியை கொண்டு செல்லும்படியாக எமது வாழ்க்கையை அர்ப்பணிப்போமானால், அதன் மூலம் நாம் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் நமது ஆன்மீக தந்தைக்கும் மிகுந்த மரியாதையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும். அதேபோல நமது வணக்கத்துக்குரிய தியோபிலஸ் மெட்ரோபொலிட்டன் அடிகளார், அனைத்து பிஷப்மார்கள் மற்றும் தலைவர்களுக்கு நமது தூய திருச்சபையை முன்னோக்கி கொண்டு செல்ல, இறைவனுடைய ஞானமும், வழிகாட்டலும் கிடைக்கும்படியாக நம்பிக்கையோடு மன்றாடுவோமாக. சகோதரிகளாக, நாம் நமது திருச்சபைக்கு ஆசீர்வாதமாகவும் ஊக்கமாகவும் இருக்க வேண்டும்.

**நாம் நம்பிக்கையோடு வாழுவோமாக.**

எனக்கு அன்பான சகோதரிகளே, கடந்த இரண்டு மாத காலங்களாக நான் பயணித்த விதத்தைக் குறித்து இந்த கடிதத்தின் மூலமாக உங்களோடு பகிர்ந்துக்கொண்டேன். மீண்டும் உயிர்த்தெழுதல் குறித்த வாக்குறுதியானது ஒரு நாள் நம் துக்கத்தை மகிழ்ச்சியாக மாற்றும். நாம் நமது மெட்ரோபொலிட்டன் அடிகளார் மற்றும் நமக்கு முன் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்ற அனைவரோடும் நித்தமும் ஒன்றாக இருப்போம். அச்சந்தர்ப்பத்தில் நாம் நம் மீட்பரோடு நித்தமும் வாழ்வோம்.

இயேசு கிறிஸ்துவானவருக்குள் நான் உங்களை நேசிக்கின்றேன் என்பதை அறிந்து, உங்களுக்காக பிரார்த்திக்கின்றேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரி
கிறிஸ்சில்லா யோஹானன்.